# ★ "ஐ.தே.க.வினல் இனப்பிரச்னைக்கு தீர்வுகாண முடியாது" லலித் கருத்து

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 08 இதழ் 195
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24— 08 — 1992

(மாத்தறை)
ஐ. தே. க. அரசு பதவியிலிருக்கும் வரை வடக்கு கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காணமுடியாது என்று லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. இயக்கத்திற்கு இந்தியா ஆயுத உதவி

(கொழும்பு)
ஜே. வி. பி இயக்கத்திற்கு இந்தியா ஆயுதங்களை வழங்கி பயிற்சியும் நிதியுதவியும் அளித்து வருகின்றதென சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் சந்தேகம் எழுந்

(4ம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாமிலிருந்த 5 தமிழ் இளைஞர் கடத்தல்

(வவுனியா)
தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பி, வவுனியா விவசாயப் பாடசாலை அகதி முகாமில் மூன்று வாரங்களாகத் தங்கியிருந்த 5 வடபகுதி இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

[4-ம் பக்கம் பார்க்க]

# ★ இலங்கையில் தொடரும் யுத்தம் குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு கவலை

(கொழும்பு)
ஸ்ரீலங்காவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றக்குழு கவலை தெரிவித்துள்ளது, குறிப்பாக யாழ். நகர் மீது ஸ்ரீலங்கா இராணுவம் பாரிய இராணுவ தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளுமானால் அது குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றம் தீவிர அக்கறை கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவைச் சேர்ந்த எம். பி.க்கள் சிலர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர். அப்போது அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகர்கள் பலரையும் சந்தித்தனர். இந்தச் சந்திப் பின்போதே அவர்கள் வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் குறித்து தமது கவலையை வெளியிட்டனர்.
இக்குழுவில் இரண்டு பிரிட்டிஷ் எம். பி.க்களும், ஒரு

(4ம் பக்கம் பார்க்க)

## "எனக்கு துப்பாக்கி பிடிக்கத்தெரியாது" - ஜனாதிபதி

(பண்டாரவளை)
''எனக்கு துப்பாக்கி பிடிக்கத் தெரியாது. ஆனால் நாட்டில் ஒரு கொலை நடந்துவிட்டால், உடனே அதனை நான் செய்துவிட்டதாக எதிர்க்கட்சியினர் கூறிவிடுகின்றனர்''

(4-ம் பக்கம் பார்க்க)

## இளவாலை-மாதகல் பகுதியில் 93 பேரைக் காணவில்லை

(பண்டத்தரிப்பு)
கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது இளவாலை, மாதகல் பகுதிகளைச் சேர்ந்த 93 பேரைக் காணவில்லையென்று அவர்களின் உறவினர்களால் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு அலுவலகத்தில் முறைபபாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் அநேகர் இளவாலைப் பகுதியிலுள்ள வசந்தபுரம், போயிட்டி, உயரப்புலம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்

[4ம் பக்கம் பார்க்க]

## க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு முன் வினாத்தாள் வெளியானது?

(கொழும்பு)
அண்மையில் நடைபெற்ற க. பொ. த (உயர்தர) பரீட்சையில் பௌதீகவியல் வினாத்தாள் பரீட்சை நடைபெறுவதற்கு முன்பே கண்டி மாவட்டத்தில் வெளியாகி

(4ம் பக்கம் பார்க்க)

## ஒரிஸாவிலுள்ள ஈழ அகதிகள் தாயகம் திரும்ப மறுப்பு

(கோராபட்)
இந்தியாவின் கிழக்கு மாநிலமான ஒரிஸாவிலுள்ள அகதிமுகாமில் தங்கியிருக்கும் இலங்கைத்தமிழ் அகதிகள் பாதுகாப்புகாரணங்களையிட்டு இலங்கைக்குதிரும்ப மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

ஒரிஸா கோராபட் மாவட்டம் மல்காகிகரியிலுள்ள முகாமில் தங்கியிருக்கும் 174 இலங்கைத்தமிழ்அகதிகளிடம் தாயகம் திரும்புவது தொடர்பான விருப்பத்தை கேட்ட பொழுது அதில் 25 பேரே திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். (ரி)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
யாழ் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை காலை முதல் அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்கு உத்தரவு நேற்று முற்பகல் 10-30 மணியிலிருந்து நீக்கப்பட்டதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் 100 முஸ்லிம் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி

(கொழும்பு)
ஊர்காவற்றுறையில் நூறு முஸ்லிம் இளைஞர்களுக்கு அரசுடன் இணைந்துள்ள தமிழ் குழு ஒன்றினால் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

பயிற்சியின் பின்னர் இந்த முஸ்லிம் இளைஞர்கள் கிழக்கு மாகாணத்தில் சேவையிலீடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்குடனேயே இவ்இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்படுவதாக தமிழ்க் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ரி)

## காணாமல் போனோர் விபரம் பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
கடந்த மூன்று நாட்களாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் குடாநாட்டின்வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட 'ஒபரேசன் பூகம்பத்தின்'' 1வது கட்ட நடவடிக்கையின் போது காணாமல் போனவர்கள் பற்றிய முழுவிபரங்களையும், அவ்வப் பிரதேசங்களில்

(4ம் பக்கம் பார்க்க)

## 300க்கும் அதிகமானோர் இராணுவத்திடம் சிக்கினர்

(கொழும்பு)
வலிகாமம் மேற்குப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது சிக்கிய 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள்இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் வயோதிபர், பெண்கள், சிறுவர், குழந்தைகள் அடங்குவர்எனவும்தெரிய வருகிறது.

மாதகல் கன்னியாஸ்திரி மடத்திலிருந்த கன்னியாஸ்திரிமாரும் இதில் அடங்குவர் எனத் தெரிவக்கப்படுகிறது. (இ-கே)

> சூழலில் உனக்கென்ன வெறுப்பு-அதைக் காப்பது என்றுமுன் பொறுப்பு

## புசல்லாவைபகுதியிலிருந்து 60 சிங்களக் குடும்பங்களை வெளியேற்ற அரசு முடிவு

(கொழும்பு)
புசல்லாவை பகுதியில் குடியமர்த்தப்பட்ட அறுபது சிங்களக்குடும்பங்களை அங்கிருந்து அப்புறப்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது.

துரித மகாவலித்திட்டத்தின் கீழ் கொத்மலையிலிருந்த இவர்களது காணிகள் மகாவலி அபிவிருத்திச் சபையினால் பொறுப்பேற்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கந்தபுராணம், உற்பத்தி காண்டம் உரையுடன், ஆறுபடை வீடுகளின் கந்தன்புகழ் (சஷ்டி) கவசம் ரூபா 9/50. கிடைக்குமிடம், ஸ்ரீகாந் புத்தகசாலை. நல்லூர், ஸ்ரீ ாந்தா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (எ-2371)

இறுங்கு மா எம்மிடம் விற்பனை உண்டு. குரக்கன் மா போன்று உணவுப் பண்டங்கள் தயாரிக்க ஏற்றது. கிடைக்குமிடம்: அண்ணு கோப்பிக் கடை, யாழ்ப்பாணம். (ஏ-2379)

### வியாழ மாற்றமும் செவ்வாய் மாற்றமும்

செப்டம்பர் முதல் வாரத்தில் செவ்வாய், வியாழ மாற்றங்கள். அக்டோபர் மத்திவரை சனிவக்கிரம் யுத்தச்செவ்வாய் வியாழனையும் வக்கிரச்சனியையும் தன் கெட்டபார்வையால் நோக்குவதால்செப்டம்பரில் சண்டை தீவிரமடையும். வியாழ மாற்றம் எங்கும் விற்பனையாகின்றது சோபிதா, யாழ்ப்பாணம், [Prof. சத்திய தாஸன். [சி-6716]

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules. கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6690]

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவிதமான இந்திய. இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை இலக்கிய,சோதி நூல்களைதெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335]

## தமிழ்நூல் கண்காட்சி

(உடுப்பிட்டி)

இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சும், திணைக்களமும் இணைந்து நாடளாவிய ரீதியில் மாவட்டங்கள் தோறும் தமிழ் நூல் கண்காட்சிகளை நடத்த தீர்மானித்துள்ளது. (150)

## வவுனியா அரச அதிபர்

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ் அமிர்தலிங்கம் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் வவுனியா தெற்கில் வடகிழக்கு மாகாண சபைகள் அமைச்சின் பிரதேச சபை அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. (59)

## ராவுக்கு அவசரத் தந்தி

(சென்னை)

இந்திய மத்திய அமைச்சர்களான பாரூக், அருணாசலம் மற்றும் தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் ஏனக் கோரி பிரதமர் நரசிம்மராவுக்கு அவசரத் தந்தி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சி வாழப்பாடி ராமமூர்த்தியின் அணியைச் சேர்ந்தோரே இந்த அவசர தந்தியை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க]

## அடையாள அட்டை பெறமுடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களில் அனேகமானோர் திடீரென வெளியேறியதனால் அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம உட்பட முக்கிய ஆவணங்களை வீடுகளில் விட்டுவிட்டு வந்துள்ளனர்.

மேற்படி ஆவணங்களை எடுத்துவரமுடியாததனால் மக்கள் மிகவும் பாதிப்படைந்த நிலையில் இருக்கின்றனர். (65)

## முல்லை கல்வித்திணைக்களம் இடமாற்றம்

(உடுப்பிட்டி)

முல்லைத்தீவு கல்வித்திணைக்களம் தற்போது ஒட்டுசுட்டானில் தற்காலிகமாக இயங்கிவருகிறது

முல்லைத்தீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையையடுத்து இரண்டு வருடங்களாக புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த இவ்வலுவலகம் தற்போது ஒட்டுசுட்டானுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. [150]

## கொட்டகை எரிந்தது

[திருநெல்வேலி]

நல்லூர் வடக்கு வீதியில் அமைககப்பட்டிருந்த உற்சவ கால சிறு கொட்டகைநேற்று முன்தினம்அதிகாலை 3மணியளவில் எரிந்தன. உடனே மாநகர சபை தீயணைக்கும் படையினர் இத்தீயினை அணைத்துவிட்டனர். இதற்கான காரணம் குறித்து அறியப்படவில்லை. (157]

## பெற்றோல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு லீற்றர் பெற்ரோலின் விலை 3-00 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனல் டீசல் விலையில் மாற்றம் எதுவும் இல்லையென இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (க)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி பாட்டு: எல். திலகநாயகம் போல், வயலின்: ஆர் ராதாகிருஷ்ணன், மிருதங்கம் கே. கண்ணதாசன்.

## சர்வதேசபோட்டி ஈழத்தமிழருக்கு தங்கப்பதக்கம

(உடுப்பிட்டி)

சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச விளையாட்டுப் போட்டியில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கைத் தமிழர் ஒருவர் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் பொகவந்தலாவை தோட்டப் பகுதியைச் சேர்ந்த எம். இராசரத்தினம் தங்கப் பதக்கத்தைப் பெற்ருர். (150]

## இந்திய-இலங்கை உடன்படிக்கை செல்லுபடியாகும்

(புதுடில்லி)

1987ம் ஆண்டில் கைச்சாத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தம் இன்னமும் செல்லுபடியாகுமென்றும், இன்றும் அது அமுலில் உள்ளதென்றும் இந்திய முன்னுள் வெளிநாட்டு அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இந்த நிலைப்பாடு பற்றுத் தெரிவிக்கையில்: இலங்கையின் பிரச்னைக்கு இலங்கையே தீர்வு காண வேண்டும் என்றும் தெரிவித்தார். [கே]

## இலவசவைத்தியசாலை

(பருத்தித்துறை)

வடமராட்சி தென்கு மேற்கு பிரதேச சபை பின் தங்கிய கிராமமான கப்புதா கிராமத்தில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. [52 அ]

## கேள்வி அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

### பின்வரும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன

| வேலைகள் விபரம் | ஆகக்குறைந்தளவு நிர்மாண, பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவுத்தொகை | நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவுத் தொகை | மீளளிக்கக் கூடிய கட்டுப் பணம் | மீளளிக்கப்படாத கட்டுப் பணம் |
|---|---|---|---|---|
| 1. புதுமுறிப்பு குளகட்டை அபிவிருத்தி செய்தல் 4 0சங்-11·0சங் | 605,000/- | 205 000/- | 300/- | 100/- |
| 2. புதுமுறிப்பு குளக்கட்டை அபிவிருத்தி செய்தல் 20·0சங்-26·0சங் | 775,000/- | 260,000/- | 300/- | 100/- |
| 3. புதுமுறிப்பு குளக்கட்டை அபிவிருத்தி செய்தல் 26·0சங்-30·0சங் | 525,000/- | 175,000/- | 300/- | 100/- |
| 4. புதுமுறிப்பு குளக்கட்டை அபிவிருத்தி செய்தல் 30·0சங்-34·0சங் | 575,000/- | 195,000/- | 300/- | 100/- |

நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்திலும் (ஐ. சி. ரி. ஏ. டி) நீர்ப்பாசனத் திணைக்களத்திலும் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர் மாத்திரம் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப் படிவங்கள் கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து 1992-08-10 தொடக்கம் 1992-09-07ம் திகதிவரை வேலை நாட்களில் காலை 9-00 மணியிலிருந்து பி. ப. 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கிளிநொச்சிப் பிராந்தியம், கிளிநொச்சி என விலாசமிடப்பட்டு 1992-09-09ம் திகதி மு. ப. 10-00 மணிக்கு முன்பாகக் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால்மூலமாகவோ அல்லது இதற்கெனப் பிரதிப் பணிப்பாளரின் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ போடப்படவேண்டும்.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர் கேள்விப் பத்திரம் அடங்கியுள்ள தபால் உறையின் இடது பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும்.

எந்திரி ந. நவநேசன்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பிரிவு.

கிளிநொச்சி
10-08-1992.

[(ஏ-2386)

## 1000 குடும்பங்களுக்கு ஒரு பதிவாளரை நியமிக்க ஏற்பாடு

(உடுவில்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் பதிவாளர் பிரிவுகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன. ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு பதிவாளர் என்ற ரீதியில் பதிவாளர் பிரிவுகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன

இதற்கான நடவடிகைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியுடன் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பதிவாளர்கள் நியமிக்கும் பிரிவுகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன.

இப்புதிய நடைமுறை 93 ஜனவரி முதல் அமுலுக்கு வருமென கூறப்படுகிறது (150)

## சமுதாய முன்னேற்றத்திற்கு ச. ச. நிலைய பங்களிப்பு மிகவும் அவசியம்

(கிளிநொச்சி)

சமுதாய முன்னேற்றத்திற்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று கிளிநொச்சி நகரில் கிளிநொச்சி சனசமூக நிலைய பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ரி. வி. கிருஷ்ணசாமி கூறினுர்.

டாக்டர் கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.கிருஸ்ணசாமி மேலும் பேசுகையில் இன்றைய காலச்சூழ்நிலையில் சனசமூக நிலையங்கள் பலவிதபணிகளை செய்யமுடியும். கல்வி, விளையாட்டு, சுகாதாரம், சமய சமூகசேவை முதலான அரிய பணிகளை சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வர்த்தக சங்க தலைவர் திரு. இ. சரவணபவானந்தன் சனசமூக நிலைய சமாசத் தலைவர் ப. வை. ஜெயபாலன் ஆசிரியர் ம மகாதேவர் ஆகியோரும் உரையாற்றினுர்கள். (83]

# ஒரு லட்சம் அகதிகளுக்கு உடைகள் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு, வலி மேற்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் ஒரு லட்சம் மக்கள் வரையில தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

உடுத்த உடைகளுடன் வெளியேறிய மக்கள் சண்டிலிப்பாய் மானிப்பாய் நவாலி உடுவில், வடமாராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள். ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ளதனால் செஞ்சிலுவைச் சங்கம், சுகாதாரப்பகுதியினர் உடனடி சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றனர்.

பெருமளவு தொண்டர்சள் இப்பகுதி அகதி முகாம்களில் இரவு பகல் பாராது சேவையாற்ற முன்வந்துள்ளனர். பல பகுதிகளில் மககளிடமிருந்து தொண்டர் ஸ்தாபனங்கள் உடைகள் போன்றவற்றை சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. (55)

அகதிகளினால் இப்பகுதிகளில் பெரும் இட நெருக்கடி

## அகதிகளும் இடம்பெயர்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு - வலி மேற்குப் பகுதிகளிலிருந்து முன்னர் பலதடவை படையினரால் மேற் காள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து அகதிமுகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்திருந்த அகதிகள் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்துவருகின்றனர்.

அகதிகள் கஇவர்கள் இடத்திற்கு இடம் மாறும் பரிதாப நிலை நெஞ்சை உருக்கும் துயரமாகக் காட்சியாய் இருக்கின்றது. (56)

## மானிப்பாய் பட்டினசபை எல்லைக்குள் 7,000 அகதிகள் தஞ்சம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பட்டின சபை எல்லைக்குள் மாத்திரம் ஏழாயிரம் பேர் அகதிகளாக வந்து தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உணவுகளை வழங்குவதில் மானிப்பாய் தெற்கு கிராமசேவையாளர் இ. இராசயோகமும், மானிப்பாய் கிழக்கு கிராமசேவையாளர் திரு. ச. சிவகுமாரும் தீவிரமாக ஈடுபட்டு வருவதை காணமுடிகிறது.

இதேவேளை மானிப்பாய் சாயி சமித்தி சேவா சங்கத்தினர் கடந்த 21 ம் திகதியும், 22ம் திகதியும் சுதுமலை சென் லத்துரை பாடசாலை மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலை, மானிப்பாய் மகளிர் பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள சுமார் 500 குடும்பங்களுக்கு சமைத்த உணவுகளை வழங்கினர்கள்.

இதே சமயம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு மானிப்பாய் பகுதி இளைஞர்கள் கடந்த 22-ம் திகதி சமைத்த உணவுகளை வழங்கினர்கள்.

வலி. மேற்குப் பகுதியில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து மேற்படி ஆலயத்தில் தங்கியுள்ள வடலியடைப்புப் பண்டத்தரிப்புப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50 க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த இளைஞர்கள் 22 ம் திகதி அவ்வாலயத்தில் வைத்து சமையல் செய்த உணவுகளை வழங்கினர்கள். (71)

# மானிப்பாயில் பத்தாயிரம் அகதிகள் சுகாதார வசதியின்றி தவிப்பு!

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேசத்தில் அகதிகளாக தங்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அடிப்படைச் சுகாதார வசதிகளின்றி மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

வலி வடக்கு வலிகாமம் மேற்குப் பகுதிகளில் தற்போது இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து இப்பகுதிகளில் தங்கியிருக்கும் சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு இதுவரை எவ்வித சுகாதார வசதிகளையும் செய்துகொடுக்க சுகாதாரப் பகுதியினர் முன்வரவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

இங்கு தங்கியுள்ள மக்கள் போதிய மலசலகூட வசதிகளின்றியும் தண்ணீர் வசதிகள் இடவசதிகளின்றியும் கஷ்டப்படுவதை நேரில் காணமுடிகிறது.

இதனால் பலவிதமான தொற்றுநோய்கள் பரவும் ஆபத்துகள் தோன்றியுள்ளதாக சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (71)

## வரட்சியினால் அகதிகள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாமில் கடும் வரட்சி நிலவுவதால் அகதிகள் வாழைச்சேனை, வாகரை முதலிய இடங்களுக்கு சென்றுள்ளனர்.

அங்கு நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இருப்பதாக அறிந்து அங்கு சென்றுள்ளனர் என தெரியவருகிறது. (59)

## 6000 அகதிகளுக்கு அரிசி, சீனி, மா பருப்புவிநியோகம்

(உடுவில்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலைகள், தேவாலயங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு மானிப்பாய் கிராமசேவையாளர்கள், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன இரவு பகலாக சேவையாற்றி வருகின்றன.

இப்பகுதிகளிலுள்ள முகாம்களில் சுகாதார வசதிகளின்றி தங்கியுள்ள மக்களுக்கு சுகாதார வசதிகளை செய்து கொடுப்பதிலும், அரிசி, மா, சீனி, பருப்பு ஆகியவற்றை வழங்கியும் வருகின்றனர்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சகல முகாம்களுக்கும் தேவையான மரக்கறிகள், உப்பு, போன்ற பொருட்களையும் வழங்கி வருகின்றது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவினருடன் இவர்கள் இணைந்து செயற்படுகின்றனர்.

இளவாலை, பண்டத்தரிப்பு, மாரீசன்கூடல். மாதகல், தெல்லிப்பழை, அளவெட்டி, சில்லாலை போன்ற பகுதிகளிலிருந்து சுமார் ஆறுயிரம் பேர் இடம்பெயர்ந்துவந்து இப்பகுதிகளில் தங்கியுள்ளனர். (109)

## சதுர்த்தி விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஹற்றுப்புலம் கோட்டை ஆதிவிநாயகர் ஆலய ஆவணி சதுர்த்திவிழா எதிர்வரும் 31-ம் திகதி நடைபெறவுள்ளது. (83)

# காணமற்போனவர் பற்றி விசாரணை 3 சம்பவங்கள் தொடர்பாக சட்டநடவடிக்கைஎடுக்கப்படும்

(கொழும்பு)

காணமற்போன நபர்கள் சம்பந்தமாக ஜனாதிபதி ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

காணமற்போன நபர்கள் சம்பந்தமான 3 சம்பவங்களை ஆணைக்குழு அதன் இடைக்கால அறிக்கையில் குறிப்பட்டுள்ளது.

முதலாவது அறிக்கை ஜி. எம். பசநாயக்கா என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் சம்பந்தப்பட்டதாகும். தடுப்புக்காவலில் இருக்கும்போது இவர் காணமற்போயுள்ளதாக ஆணைக்குழு கருதியுள்ளது.

இரண்டாவது அறிக்கை தங்காலையைச்சேர்ந்த ஜெகத் சந்திரசிறியின் மறைவுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி சம்பந்தப்பட்டதாகும்.

மூன்றுவது இடைக்கால அறிக்கை கம்புறுப்பிட்டியை சேர்ந்த தயானந்த செனவிரத்ன காணமற்போனதற்கு பொறுப்பாகவிருந்த 3 பொலிஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்டதாகும்.

ஆணைக்குழுவினால் குற்றவாளிகளென இனங்காணப்பட்ட இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி சட்டமா அதிபருக்கு பணித்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (மா)

## அராலியிலிருந்து பஜனை பாதயாத்திரை இன்று காலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நயினை நல்லூர் பஜனை பாதயாத்திரைக் குழு. நாட்டின் சூழ்நிலை காரணமாக தமது பாதயாத்திரையை அராலி ஆரவம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திலிருந்து பூசைகள், பஜனைகளைத் தொடர்ந்து இன்று 24-ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை ஆரம்பிக்கவுள்ளது.

'ஆத்மஜோதி' நா. முத்தையா தலைமையில் இடம்பெறும் பாதயாத்திரை சங்கரத்தை ஊடாக சீரணி நாகம்மாள் ஆலயத்தை நண்பகல் சென்றடையும்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு மானிப்பாய் ஊடாக சுதுமலை சிறி புவனேஸ்வரி அம்பாள ஆலயத்தைச் சென்றடைந்து அன்றிரவு அம்பாள் ஆலயத்தில் பூசைகள், பஜனைகள் நடைபெற்று. நாளை 25-ம் திகதி தாவடி ஊடாக தாவடிப் பிள்ளையார் கோவில், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவில் புதுக்கோவில் வண்ணை நாச்சிமார் கோவில் வழியாக யாழ். கொட்டடி விள்ளூன்றி விநாயகர் ஆலயத்தை நண்பகல் சென்றடைந்து அங்கிருந்து புறப்பட்டு வண்ணை வைத்தீஸ்வரர்ஆலயம், கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயம் வண்ணை சிறி வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் ஆலயம் சென்று பின் காங்கேசன்துறை வீதி அரசடி வீதி வழியாக கந்தர்மடம் ஞானவைரவர் நாகபூசணி அம்பாள் ஆலயத்தைச்சென்றடைந்து அங்கு பூசை கூட்டு வழிபாடு நற்சிந்தனை நடைபெற்று அன்றிரவு தங்கி மறுநாள் 26-ம் திகதி புதன்கிழமை அதிகாலை நல்லைக் கந்தன் திருககோவிலைச் சென்றடையும்.

மேற்படி பஜனைப் பாதயாத்திரை செல்கின்ற வழிகளிலுள்ள ஆலயங்களை பாதயாத்திரை அடியார்கள் தரிசித்து பஜனை நடத்திச் செல்வார்கள் அதற்கேற்ற ஒழுங்குகளை வீதிகளிலுள்ள ஆலய நிர்வாகிகள் செய்து தரவேண்டுமென்றும் பாதயாத்திரை வரும் வீதிகளிலுள்ள அடியார்கள் தத்தம் இல்லங்களில் பூரண கும்பம் வைத்து வரவேற்று வழிபாடு செய்யவேண்டுமென்றும் சப்த தீவக திவ்ஜ சங்க சமாஜத்தினர் கேட்டுள்ளார்கள். (சு)

## இராசி பலன்

24-08-1992
திங்கட்கிழமை
(தமிழுக்கு ஆவணி 8)

ஏகாதசி மாலை 6-21வரை. திருவாதிரை மு. இ. 7-14, இராகுகாலம் காலை 7-35 முதல் 9-05 வரை, சுபநேரம் பகல் 12-05 முதல் 1-35வரை, சித்தாமிர்தம், ஏகாதசி விரதம்.

மேடம்: காரிய அனுகூலம், நிலைத்தபுகழ், விருந்துண்ணல்

இடபம்: வீணனகுழப்பம், அதிகசெலவு, வாக்குப்பகை

மிதுனம்: இனபகரமான மனநிலை, குதூகலம், பணவரவு.

கடகம். பொருள் இழப்பு, வீண்செலவு, அகால உணவு.

சிங்கம்: பெண் உதவி, சுபச் செய்தி, சுற்றத்தவர் வருகை.

கன்னி: மேலதிகாரிநன்மை, புதியதிட்டம், முயற்சி பலிதம்.

துலாம்: மனக்குழப்பம், அசௌகரியம், கட்டுப்படுதல்.

விருச்சிகம்: வாக்குவாதம், மனப்போராட்டம், பயமிகுதி.

தனுசு: குடும்ப மகிழ்ச்சி, அன்னியர் உதவி, நற்பணி.

மகரம்: நோய்குணமாகும், அயலூர்பயணம், காரியசித்தி.

கும்பம். குடும்பபகை, விதண்டாவாதம், கெட்ட கனவு

மீனம்: உறவினர் மனத்தாங்கல், ஏமாற்றம், சந்தர்ப்பம் தவறுதல்.

— ஜோஸ்யர்

## சிங்கப்பூரில் இல. பெண்ணுக்கு கத்தி வெட்டு

(உடுப்பிட்டி)

சிங்கப்பூரில் பணி புரிந்த இலங்கைப் பெண்ணொருவர் கத்தியால் வெட்டப்பட்டுள்ளார்

தனியார் ஒருவரிடம் வேலை செய்துதந்த இலங்கைப்பெண் சம்பள உயர்வு கோரியதற்காக கத்தியால் வெட்டப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

களுத்துறையைச் சேர்ந்த இப்பெண் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (150)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழோசை மன்றம் வழங்கும் இசை விழா நிகழ்ச்சி இன்று 24 ம் திகதி மாலை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் ரவி, ரஜி சகோதரர்களின் நாதஸ்வர இசை நிகழ்ச்சியும், வதனசோதி ஆறுமுகம்-பாட்டு கண்ணம்பாள் பாக்யராசா- வயலின், வர்ணரமேஸ்வரன்-மிருதங்கம் ஆகியோர் பங்குபற்றும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (158)

## மன்னார் அகதிகள் வெளியேறத் தடை

(மன்னார்)

மன்னார்த் தீவிலுள்ள அகதிகள் மடுப்பகுதியிலுள்ள தட்சணமடு அகதிமுகாமுக்கு செல்வதற்கு ஐ. நா. சபை அதிகாரிகளிடம் கோரியிருந்தாகவும் ஆனால் தற்பொழுது மன்னார் தீவிலுள்ள இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. (59)

## வருடாந்த உற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 2ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (83)

## இன்பவாழ்வு நிலைத்திட அருள்வாய்

இக்குவலயம் போற்ற இணையிலாப் பதியைநாடி
ஈடிலாஅருள் வாரிவழங்கிடும் குமரவேளே!
நெக்குநெக்குருகி நின்திருப் புகழேபாடி நின்று
நிமலனே! கந்தா! கடைத்தேற எமக்குத்
திக்குவேறில்லை ஐயா! திரு நல்லைப் பெருமானே, உன்
திருவடித் தாமரையே சரணமென்று துதித்து
நிக்குமுன் மாசிலா அடியார்க் கென்றும்
நீணிலத் தின்பவாழ்வு நிலைத்திட அருளுவாயே!

இ. குகதாசன்.

(இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் 22ம் திருவிழா)

## ஜே. ஆர். - பிரேமா ஒருவரை ஒருவர்
# சாடும் படலம் தொடர்கிறது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவும், பிரேமதாசாவை ஜே. ஆரும் மாறிமாறி ஒருவரை ஒருவர் சாடும் படலம் தென்னிலங்கை அரசியலில் சூடுபிடித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பண்டாரவளையில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில், ஜனாதிபதி பிரேமதாசா ஜே ஆரின் ஆட்சிக் காலத்தில செய்த தவறே தற்போதைய நெருக்கடிக்குக் காரணமெனக் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் ஆட்சியில், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்பட்டன. இவற்றின் மூலம் பெருமளவு நிவாரணத்தைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர்.

இந்த சபைகள் திட்டமிட்ட அடிப்படையில் செயல்பட்டிருக்குமானால் இன்றுள்ள பிரச்சினை எதனையும் நாம் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது

குறுகிய நோக்குடைய சிலர் அந்த சபைகளுக்கு நடந்த தேர்தலை சீர்குலைத்தார்கள். யாழ். நூலகத்தை எரித்தார்கள்.

இன்றைய நிலைமைக்கும் அமைதியின்மைக்கும் மூல காரணங்கள் அவையேதான் என்று கூறினார்.

இதற்கு முன்னர் ஜே. ஆர். பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியொன்றில் இந்திய படையை திரு. பிரேமதாசா திருப்பி அனுப்பியதால் தான் இன்று நெருக்கடி நிலை தோன்றியுள்ளது என்று கூறியுள்ளார். (கே-ரி)

## ஜே. ஆர். காலத்தில்
# கொலைஞர் படை இல்லை
### - லலித்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் சில பழிவாங்கல்கள், தொல்லைகள் இருந்திருக்கலாம். ஆனால் கொலைஞர் படைகள் இருக்கவில்லை.

தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் அரசியலமைப்புக்கு முரணான விடயங்கள் யாவும் இடம்பெறுகின்றன என்று முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலி பி. பி. ஸி.க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சியில் ஊழலும், கொலைகளும் நாட்டில் மலிந்துள்ளன என்றார். (மா

# 4 இலங்கை தமிழர்
## தமிழகபொலிஸாரால்கைது

(சென்னை)

மோட்டார் பூட்டிய கட்டு மரம் மூலம் தமிழ்நாட்டுக் கடற்கரையிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற 4 இலங்கைத் தமிழர்களை தமிழகப் பொலிசார் கைதுசெய்தனர்.

அவர்கள் சென்ற கட்டுமரத்தின் மோட்டார் பழுதடைந்து நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த சமயம் மீனவர்கள் இவர்களைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (கே)

## சங்கானை பகுதியில்
# 12 முகாம்களில் 650 குடும்பங்கள்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 12 முகாம்களில் சுமார் 650 குடும்பங்கள் தங்கியுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலிருந்து சுமார் 650 குடும்பங்கள் வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்ணாகம், சங்கானை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் பன்னிரண்டு அகதி முகாம்கள் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு அந்த அந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் மூலம் 'சமைத்த உணவுகள் வழங்கப்படுகின்றன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் துரித கதியில் மேற்கொண்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பாலகிருஸ்ணன் அவர்களை இடம் பெயர்ந்தவர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

## 'ராஜாளி'க்கு எதிராகவிசாரணை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பத்திரிகையான 'ராஜாளி'க்கு எதிராக விசாரணையைத் தொடர்ந்து நடத்த கொழும்பு கோட்டை நீதிபதி இரகசிய பொலிசாருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

மேற்படி பத்திரிகையின் ஆகஸ்ட் 15ம்திகதி இதழில்பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரை பற்றியே இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (கே)

## செஞ்சோலை இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

செஞ்சோலை இசைமாலை நிகழ்ச்சி இம்மாதம் 28ம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இரவு 8-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

# ஷெல் தாக்குதலில் படுகாயம்

(பலாலி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து படையினர் நேற்றுக் காலை 9 மணியளவில் பெரிய விளான் நோக்கி ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இடம் பெயர்ந்து வந்து உடமைகளை எடுக்கச் சென்ற ஒருவர் இதில் படுகாயமடைந்தார்.

மாதகல் பெரியவிளானைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜெயராசா [30 வயது) என்பவரே படுகாயமடைந்தவராவர். [இ. 56]

## ஊரடங்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலிமேற்குப்பகுதியில் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த 'ஒப்பரேஷன் பூகம்பம்' பூர்த்தியடைந்ததாக இராணுவம் அறிவித்ததைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## ஏழு பேர் விடுதலை

(பண்டத்தரிப்பு)

கடந்த வியாழக்கிழமை மாதகல் இளவாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது உயரப்புலம் கிராமத்தில் அதிகாலை வேளையில் படுக்கையில் வைத்து இராணுவத்தினால் பிடிக்கப்பட்ட ஏழு பேர் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. (72]

## ஜே வி. பி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

1989ம ஆண்டு ஜே. வி. பி. இயக்கம் சிறிலங்கா அரசினால் முறியடிக்கப்பட்டதை அடுத்து இந்த இயக்கத்தைச் சேர்ந்த 400 உறுப்பினர்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

இவர்களுக்கு புகலிடம் அளித்துள்ள இந்திய அரசு தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் இவர்களைத் தங்க வைத்து தேவையான உதவிகளை வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 14ம திகதி வவுனியா நகருக்குச் சென்றுவிட்டு வருவதாகக் கூறிச் சென்ற இவர்கள் இதுவரையும் முகாம் திரும்பவில்லை என்றும், இவர்கள் சீருடை அணிந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரியவருகிறது.

வை லிங்கன் (26 வயது சங்கானை), இ. முருகானந்தராஜா (31வயது கிளிநொச்சி), சி. இராமகிருஷ்ணதேவர் (26 வயது கிளிநொச்சி), செ. சிவஞானசுந்தரம் (28 வயது பூநகரி), சு. செல்வராஜா (31 வயது வல்வெட்டித்துறை) ஆகிய 4 தமிழ் இளைஞர்களே கடத்தப்பட்டவர்களாவர். [ரி]

## ஒய்வூதியம்

(அரியாலை)

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுபவர்களின் ஆகஸ்ட் மாதக் கொடுப்பனவு, யாழ். அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகிலுள்ள மேற்படி சங்கக் கிராமிய வங்கியில் வழங்கப்படுகிறது. (101)

## காணமல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயங்குகின்ற செஞ்சிலுவைச் சங்கங்களின் பணிமனைகளில் ஒப்படைக்கும்வண்ணம் யாழ். செஞ்சிலுவைச்சங்க இடைக்கால நிர்வாகக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையால் காணமல் போனவர்களின் தொகை மிகஅதிகமாக இருக்கின்ற காரணத்தால் இவர்கள் பற்றியவிபரங்களை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவுசெய்து கொள்வதில் ஏற்படுகின்ற கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காகவும் காணமல் போனவர்கள் பட்டியலில் யாரும் தவறவிடப்படக்கூடாதென்பதனாலுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இக்குழு தெரிவிக்கின்றது.

இதேவேளை ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் இயங்குகின்ற செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் இவ்வாறு காணமல்போனவர்களுடைய எல்லா விபரங்களையும் சேகரித்துப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும்இக்குழுகேட்டுக் கொள்ளுகின்றது. (161-ரி)

## உடைமைகளை மீட்கும் முயற்சியில் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் வலி வடக்கு, வலி-மேற்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பிற இடங்களை நோக்கிச் சென்றவர்கள், தத்தமது இடங்களுக்குச் சென்று தமது உடைமைகளை எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். 25,000 குடும்பங்கள் வரையில் தமது உடைமைகளை அப்படியே விட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இராணுவம் நிலைகொண்டிருக்கும் இடங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களுக்குச் சென்று தமக்கு வேண்டிய பொருட்களை இவர்கள் எடுத்துவருகின்றனர். (சி-56)

## எனக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பண்டாரவளை ஐ. தே. க. மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாச இவ்வாறு கூறினார்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதநிலை தலைதூக்கியுள்ளது என்றும் எதிரணியினர் தன் மீது வீண் பழி சுமத்துவதாகவும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

உண்மையைச் சொல்லப் போனால் ஒருவர் ஒரு கப்பலை விழுங்கிக்கொண்டுஇருந்தார், இன்னொருவர் மகாவலி திட்டத்தில் 35வீதசெலவிற்கு பதிலாக 55 சத வீதத்தை செலவுசெய்தார். இவர்களின் குற்றங்களை குறைகூறியதும் இவர்கள் எனக்கு எதிராக திரும்பினர் என்றும் அவர் கூறினார். (இ-கே)

## க. பொ. த.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ளது என்று பரீட்சைத் திணைக்களத்திற்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

பரீட்சைத் திணைக்களம் தற்போது இதுசம்பந்தமாக பூரண விசாரணையில் இறங்கியுள்ளது.

க. பொ. த. (உயர்தர) பௌதிகவியல் பாடப்பரீட்சை நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்பதாக மேற்படி பாட பரீட்சை வினாத்தாள்கள் கண்டியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் ஒரு தொகை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகவும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (மா,

## ஐ. தே. க.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தறை மாவட்டத்திலுள்ள மித்தெனிய என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. லலித் அத்துலத்முதலி மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது; "வடக்கு கிழக்கு பிரச்சினையை விரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமானால் அரசாங்கத்தை மாற்றியமைக்க வேண்டும். இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு தேவை.

அரசாங்கத்திற்கு எதிராக இன்று எவருக்கும் பேசமுடியாத நிலை அவ்வாறு செய்தால் அடுத்த நாள் அவர்கள் கடத்திச் செல்லப்படுவார்கள் இன்று ஜனாதிபதிக்கு தேவை விளம்பரம அவருக்கு மக்களைப்பற்றி எந்தக்கவலையுமில்லை'' என்றும் அவர் கூறினார். (வீ)

## இலங்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அயர்லாந்து எம். பி.யும், ஒரு பிரெஞ்சு எம். பி.யும் அங்கம் வகித்தனர்.

வடக்கு கிழக்குயுத்தத்தினால் தமிழ்மக்கள்படும் கஷ்டங்களும், உயிரிழப்புகளும். அவர்களின் சொத்துக்களுக்கு ஏற்படும் பாரிய இழப்புக்களும் ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவைப் பெரிதும் கவலைக்குள்ளாகியிருப்பதாகவும் ஸ்ரீ. ல. சு. கட்சி பிரமுகர்களிடம் அவர்கள் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## புசல்லாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டதையடுத்து இந்த 60 சிங்களவர் குடும்பங்களுக்கும் புசல்லாவையில் காணிகள் வழங்கப்பட்டன.

புசல்லாவை பகுதியில் குறிப்பிட்ட ஒரு தோட்டத்தில் இவர்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டதை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தித் துறை அமைச்சர் திரு எஸ். தொண்டமான் தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

இந்த சிங்களக் குடும்பங்களை அங்கிருந்து அப்பறப்படுத்துமாறு கோரி திரு. தொண்டமானின் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் அந்தத் தோட்டத்தில் ஒரு வேலைநிறுத்தத்தையும் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் தாம்கொலை செய்யப்பட்டாலும் அங்கிருந்து தாம் வெளியேறப் போவதில்லையெனவும் அரசின் இந்த முடிவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அந்த 60 சிங்கள குடும்பத்தவர்களும் தெரிவித்துள்ளனர். (இ)

## இளவாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களாவர்.

இராணுவ நடவடிக்கையின் போது காணமற்போய்விட்டவர்கள் பற்றிய விபரங்களை மானிப்பாயில் செயற்பட்டு வரும் செஞ்சிலுவைச்சங்க சண்டிலிப்பாய் பிரிவு அலுவலகத்தில் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காணமல் போனவர்களைப் பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அறிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (72-வீ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தொணைத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/1